2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சுருக்கமாக. நீங்கள் விவரங்களையெல்லாம் சொல்லி விட்டீர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, ஊராட்சிகளைப் பிரிப்பது மட்டுமல்ல, கடந்த காலத்தில் பல்வேறு நடைமுறைகள் கிடப்பிலே போடப்பட்டன. அதிலே இதுவும் ஒன்றாக இருக்கலாம். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான அரசு, நீங்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பைத் தரும், எதிர்காலத்தில் நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

வீட்டுமனைப் பட்டா

*3166—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, பாரதி நகர், 47-வது வார்டு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள பாரதி நகர் திட்டப் பகுதி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் வசிப்பவர்களில் முழு கிரயத் தொகை செலுத்திய பயனாளிகளுக்கு தற்போது கிரயப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் அவர்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி, 17–வது வார்டில் உள்ள பாரதி நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு கடந்த 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் அளவீடு செய்யப்பட்ட சர்வே எண் 1845/1, மனைகள் பாரதி நகர் திட்டப் பகுதிகளாக உருவாக்கப்பட்டு, ஏழையெளிய பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டன. இம்மனைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கிரயத் தொகையை தவணை முறையில் செலுத்தும் வகையில் வரையறுக்கப்பட்டு, இதில் 65 உரிமையாளர்கள் கிரயத் தொகை முழுமையும் செலுத்தி, கிரயப் பத்திரம் பெற்றுள்ளனர். மீதமுள்ளவர்கள் தங்கள் பொருளாதார சூழ்நிலையின் காரணமாக கிரயத் தொகையைச் சரியாகச் செலுத்தாததால் அவை வட்டிக்குமேல் வட்டியாக கூடி இன்று ஒரு பெரும் தொகையாக மாறியுள்ளது. கிரயத் தொகையை கட்டியவர்களுக்குப் பட்டா வழங்க, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் வாயிலாக தடையில்லா சான்றிதழை அரசாணையாக வெளியிட வேண்டியும், கிரயத் தொகையை சரிவர செலுத்தத் தவறியவர்களுக்கு அவர்களின் பொருளாதார சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, கிரயத் தொகையை செலுத்துவதில் சலுகை வழங்கி, அவர்களுக்குக் கிரயப் பத்திரம் வழங்க வழிவகை செய்யுமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால், சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பாரதி நகர் திட்டப் பகுதியில், 438 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதிக்கான நிலம் அரசாணை (நிலை) எண் 678, வருவாய்த் துறை, நாள் 15–12–2005–ன்படி நில மாற்றம் செய்யப்பட்டு, விற்பனைப் பத்திரங்கள் 217 மனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 221 மனைகளில் உள்ள பயனாளிகள் உரிய ஆவணங்கள் மற்றும் முழு கிரயத் தொகை செலுத்தாத நிலையில் உள்ளதால், சிறப்பு முகாம் அமைத்து மனைக்கான

2021 செப்டம்பர் 9]

தொகையினைப் பெற்று கிரயப் பத்திரத்தை நிச்சயமாக, இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் அவர்கள்.*

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி முழுவதும் உள்ள திட்ட பகுதிகளில், இதுவரை எத்தனை மனைகளுக்குக் கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது? இன்னும் எவ்வளவு மனைகளுக்கு கிரயப் பத்திரம் வழங்க வேண்டும்? அதை எப்போது வழங்கப்போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில், 61 திட்டப் பகுதிகளில், மொத்தம் 15,649 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மனைக்கான முழுத் தொகையை செலுத்திய முதல் ஒதுக்கீட்டுதாரர் மற்றும் வாரிசுதாரர்கள் 2,698 பேர்களின் மனைகளுக்கு கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலானோர் தங்கள் மனைகளை வேறு ஒரு நபருக்கு விற்று, அம்மனைகளில் மூன்றாம் நபர் வசித்து வருவதால், அரசாணை எண் 804-ஐ நீட்டிப்பு செய்து வரன்முறைப்படுத்தவும், மீதமுள்ள 12,951 மனைகளுக்கான தொகையினைப் பெற்று கிரயப் பத்திரம் வழங்கவும் இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்படுகிற வீடுகளுக்குப் பதிவு செய்த பயனாளிகள், முழுத் தொகையை கட்ட இயலாத சூழ்நிலையில், வீடுகளும் அவர்களுக்கு வழங்குவதில்லை, பராமரிப்பும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது.*

ஆகவே இரண்டு கட்டமாக அந்தத் தொகையைக் கட்டுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 10–35

குறிப்பாக ஈரோடு மாவட்டத்தில் ஏறத்தாழ 9,700 வீடுகள் கட்டி, பயனாளிகள் ஒருவர்கூட அதனைப் பயன்படுத்த இயலவில்லை. இரு தவணைகளில் கட்டுவதற்குப் பயனாளிகள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, இதனை அரசு பரிசீலிக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வாரியத்திற்குப் பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள். அநேகமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றைக்கு அவையில் இல்லை, பத்திரிகைகளில் பார்த்திருப்பார். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வாரியத்திற்குப் பெயர் மாற்றம் செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மூன்று விதமான பயனாளிகளுக்கு நாம் வீடு தருகிறோம். அதில் ஒன்று, 40 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட கட்டடங்கள் அல்லது சிதிலமடைந்திருக்கின்ற கட்டடங்களையெல்லாம் இடித்துவிட்டு, அங்கே குடியிருக்கின்ற மக்களுக்கு மீண்டும் வீடு கட்டித் தருகிற ஒரு திட்டம். அதில் ஒன்றரை இலட்சம் ரூபாய் பயனாளிகள் பங்கு தர வேண்டும். அதாவது தமிழ்நாட்டிலேயே, அதிகமான மானியம் தருகிற ஒரே திட்டம், இந்த வாரியத்தில்தான்; ஒன்றிய அரசு ஒன்றரை இலட்சம் ரூபாயும், நம்முடைய தமிழக அரசு 7 இலட்சம் ரூபாயும் மானியம் தருகிறது. 10 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீடு என்று சொன்னால், அதில் ஒன்றரை இலட்சம் ரூபாய் பயனாளிகளின் பங்கை அவர்கள் நிச்சயமாகக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். இது கடந்த கால ஆட்சியிலும் நடைமுறையில் இருந்தது. எங்களுடைய ஆட்சிக் காலத்திலும் அதுதான் நடைமுறை. இது ஒரு திட்டம்.

2021 செப்டம்பர் 9]

இரண்டாவது ஒரு திட்டம். வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கிற ஏழை மக்கள் வீடு வேண்டுமென்று சொல்லி, தற்போது 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்கிற திட்டத்தில்கூட நிறைய பேர் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் மொத்தம் 11 இலட்சம் ரூபாய் என்றால், எட்டரை இலட்சம் ரூபாய் அரசு பங்கு என்றால், மீதமுள்ளதை பயனாளிகளின் பங்காக அவர்கள் கொடுத்துத்தான் ஆக வேண்டும். இதில் நாங்கள் என்ன செய்கிறோம் என்றால், ஏழைகள் மொத்தமாகப் பணம் கொடுக்க முடியாது என்பதால், நாங்களே வங்கியின்மூலம் அவர்களுக்குக் கடன் பெற்றுத்தருகிறோம். மாதாமாதம்கூட அந்தத் தொகையை ஏழைகள் கட்டலாம் என்ற உத்தரவை நாங்கள் போட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் துறையின்மூலம் அவர்களுக்கு நாங்கள் பணம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

மூன்றாவது, ஆக்கிரமிப்புகளில் குடியிருப்பவர்கள், ஆற்று ஓரங்களில், நெடுஞ்சாலை ஓரங்களில் குடியிருப்பவர்களை அப்புறப்படுத்தி, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களெல்லாம், எங்களுக்கு இவ்வளவு வீடுகள் கொடுங்கள், இவர்களை நாங்கள் அப்புறப்படுத்தப்போகிறோம் என்று சொன்னால், அவர்களுக்கு நாங்கள் என்ன செய்கிறோம் என்று சொன்னால், நதிகள் சீரமைப்புத் திட்டம், அறக்கட்டளை மூலமாக எங்களுக்குப் பணம் கொடுத்து விடுவார்கள். அதில் பயனாளிகள் பணம் கொடுக்கத் தேவையில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாநகராட்சி Commissioner, யாருக்குச் சொல்கிறார்களோ அவர்களுக்கு நாங்கள் ஒதுக்கீடு செய்துவிடுவோம். அவர்கள் மட்டும் பணம் தரத் தேவையில்லை. சில பயனாளிகள் என்ன செய்கிறார்களென்றால், 'அவர்களிடம் மட்டும் பணம் வாங்க மாட்டேன் என்கிறீர்களே, எங்களிடம் மட்டும் பணம் கேட்கிறீர்களே' என்பதுபோல் குற்றச்சாட்டுகள் சொல்கிறார்கள். நீங்கள் பணமே கட்டாதீர்கள் என்று பல பகுதிகளில் இன்றைக்கு தொழிற்சங்க நிருவாகிகள் தூண்டிவிடுகிறார்கள். K.P. Park-ல் 1,200 வீடுகள் ஓர் இடத்தில் கட்டப்பட்டு, அதற்குப் பக்கத்திலே சுமார் 800 வீடுகள் கட்டப்பட்டன. ஓர் இடத்தில் பயனாளிகளின் பங்கு அறக்கட்டளையின் சார்பாகக் கொடுக்கப்பட்டதால், அவர்களிடம் பணம் வாங்குவதில்லை. இன்னொரு பக்கத்தில் இருப்பவர்களிடம் பயனாளிகளின் பங்கைக் கேட்கிறபோது, அவர்களுக்கு மட்டும் நீங்கள் இலவசமாகக் கொடுத்திருக்கிறீர்களே, எங்களிடம் பணம் கேட்கிறீர்களே என்ற வித்தியாசம் வருகிறது. இதுதான் முறை.

ஆகையால், உங்கள் ஆட்சியில் என்ன நடைமுறை இருந்ததோ, அதே நடைமுறைதான் எங்கள் ஆட்சியிலும் இருக்கிறது. ஆகையால், பயனாளிகளின் பங்கை நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். இது அரசினுடைய விதி என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***1928—திரு. K. மாரிமுத்து:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, தில்லை விளாகம் ஊராட்சியில் புதியதாக அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்துப்பேட்டை வட்டாரத்தில் உள்ள தில்லை விளாகம் ஊராட்சியில் அரமங்காடு, கீழக்கரை, செங்காங்காடு, தில்லை விளாகம், தில்லை தெற்குகாடு 1, தில்லை தெற்குகாடு 2 மற்றும் துறைத்தோப்பு என மொத்தம் ஏழு இடங்களில் குழந்தைகள் மையங்கள், அதாவது அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் அரமங்காடு, செங்காங்காடு, தில்லை விளாகம் மற்றும் துறைத்தோப்பு ஆகிய 4 இடங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்கள் அரசு சொந்தக் கட்டடங்களிலும், கீழக்கரை மற்றும் தில்லை தெற்குகாடு-1 ஆகிய இரண்டு இடங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்கள் அரசு இலவசக் கட்டடங்களிலும், தில்லை தெற்குகாடு-2 மையம் மட்டுமே வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. தில்லை தெற்குகாடு 2–ல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் அந்தக் குழந்தைகள் மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும் பணி மாவட்ட